செ.வெ.எண்: 805

நாள்: 21/09/10

பத்திரிக்கை செய்தி

**இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம், 2000 திருத்தப்பட்ட சட்டம் 2006ன் கீழ் குழந்தைகள் இல்லங்கள்/காப்பகங்கள்/ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்கள் கட்டாயம் பதிவு செய்தல்**

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம், 2000 திருத்தப்பட்ட சட்டம், 2006ன் பிரிவு 34(3)ன்படி பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை வைத்து பராமரிக்கும் மாநில அரசின் கீழியங்கும் குழந்தைகள் இல்லங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழியங்கும் குழந்தைகள் இல்லங்கள் அனைத்தும் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

2. ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் இதர அறநிலையங்களுக்கான (மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1960 அல்லது வேறு ஏதேனும் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் குழந்தைகள் இல்லங்கள் மற்றும் காப்பகங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பினும், மீண்டும் இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) திருத்தப்பட்ட சட்டம், 2006ன் கீழ் கட்டாயமாக பதிவு செய்தல் வேண்டும்.

3. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்காக நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள் / குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்கள் / ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்கள் (0 முதல் 18 வயது வரை) ஆகியவற்றை இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) திருத்தப்பட்ட சட்டம், 2006ன் பிரிவு 34 (3)ன்படி **31–10–2010க்குள்** கட்டாயமாக பதிவு செய்திட அனைத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இச்சட்டத்தின் கீழ் குழந்தைகள் நிறுவனங்களை பதிவு செய்வது தொடர்பாக அந்தந்த மாவட்ட சமூகநல அலுவலர் (அல்லது) மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் (அல்லது) நன்னடத்தை அலுவலர்கள் (சமூகப்பாதுகாப்புத்துறை) ஆகியோரை தொடர்பு கொண்டு மத்திய அரசின் இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமாப்பு) விதிகள், 2007ல் குறிப்பிட்டுள்ள தரத்தின்படி அதற்கென அமைந்த விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. எனவே, திருத்தப்பட்ட இளைஞர் நீதிச் (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம், 2006ன் கீழ் பதிவு செய்யாமல் எந்த குழந்தைகள் இல்லங்கள்/காப்பகங்கள் செயல்படக்கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. பதிவு பெறாமல் செயல்படும் நிறுவனங்கள் மீது சட்டப்பூர்வமாக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்டுகிறது.

21/9/10
இயக்குநருக்காக

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

21/09/10